


# யாழ்/யூனியன் கல்லூரி
## கொடிக் கீதம்

தெல்லியூரில் ஆதியாக வந்த அன்னையே-என்றும்
ஏற்றமோடு நாம் துதிப்போம் ஒன்று கூடியே
கல்வி ஓங்க கலை சிறக்க வந்த அன்னையே
தெல்லியூரின் யூனியன் கல்லூரி வாழ்க வாழ்கவே.

அதிபர் துரை ரத்தினம் அவர்களின் சேவையால்
எங்கள் கல்லூரி வளர்ந்தது பல்வளங்கள் கொண்டதாய்
பெருகும் பெருமை பேணிக்காக்க பச்சை நீலமாய்
கொடியை ஏற்றுவோம் எங்கள் அன்னை பாதம் பணிந்தே

ஆயிரத்தொண்ணூற்றிப் பதின் ஆறாம் ஆண்டிலே
மக்கள் அறிவுத்தாகம் திர்க்க வந்த அன்னை ஜோதியே
ஆயிரம் பல்லாயிரம் அறிஞர் கூட்டத்தை –நம்
நாட்டிற்கீயும் யூனியன் கல்லூரி வாழ்கவே.

செந்தமிழோடாங்கிலமும் கணிதமும் விஞ்ஞானமும்
சேரும் அழகியலும் தொழில்நுட்பமும் சமயம் சமூகமும்
சுந்தர மனையியலும் வர்த்தகம் விளையாட்டிலும்
சிந்தை நிறை வெற்றி தரும் கல்லூரி வாழ்கவே.

அதிபரோடு ஆசிரியர் மாணவர் வாழ்க
வெற்றிமேலே வெற்றி நல்கும் எங்கள்
அன்னையே வாழ்க என்று கொடியை ஏற்று
அன்னை பாதம் பணிந்து போற்றுவோம் -எங்கள்
யூனியன் கல்லூரி வாழ்க வாழ்க வளர்கவே.

உருவாக்கம்- யாழ் யூனியன் கல்லூரி இனையத்தள குழு
தொடர்புகளுக்கு- info@junioncollege.com

